


திருச்சி ஐஐஎம்மில் நடந்த பட்டமளிப்பு விழாவில் மாணவி ஒருவருக்கு கவர்னர் ரவி பட்டம் வழங்கினார். அருகில் ஐஐஎம் ஆட்சிமன்றக் குழு தலைவர் ஜலஜ்தானி, இயக்குனர் பவன்குமார் சிங்.

# இளைஞர்களின் இலக்கு 2047ல் வளர்ச்சியடைந்த இந்தியா

## கவர்னர் ரவி அழைப்பு

**திருச்சி, மார்ச் 30–**

திருச்சி இந்திய மேலாண்மை நிறுவனத்தில் (ஐஐஎம்) 13வது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. ஆட்சி மன்றக்குழு தலைவர் ஜலஜ் தானி தலைமை வகித்தார். திருச்சி ஐஐஎம் இயக்குனர் பவன்குமார் சிங் பட்டமளிப்பு அறிக்கை வாசித்தார். விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கவர்னர் ரவி, 457 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கி பேசியதாவது:

சிறந்த மாணவர்களை உருவாக்குவதில் ஐஐஎம் ஆசிரியர்களின் பங்கு அளப்பரியது. மாணவர்கள் பட்டம் பெற்றுள்ள நேரம் இந்தியாவின் பொற்காலம். திறமை வாய்ந்த இளைஞர்களுக்கு நாட்டில் வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

10 ஆண்டிற்கு முன்பு வளர்ந்த நாடுகளால் இந்தியா திரும்பி பார்க்கப்படவில்லை. ஆனால், இப்போது உலக நாடுகள் எந்த ஒரு முக்கிய முடிவையும் இந்தியாவின் ஆலோசனை இல்லாமல் மேற்கொள்வதில்லை.

பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்து வரும் நாடாக இந்தியா உள்ளது. 10 ஆண்டிற்கு முன்பு, 500ஆக இருந்த 'ஸ்டார்ட் அப்' நிறுவனங்கள் இப்போது 1,600க்கும் மேல் அதிகரித்துள்ளது.

25 கோடி இந்திய மக்கள் ஏழ்மையிலிருந்து மீண்டு வந்துள்ளனர். செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக், விண்வெளி, நானோ தொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பதுறைகளில் இந்தியா அசாத்தியமான வளர்ச்சியடைந்து வருகிறது. இளைஞர்களின் கடமை பட்டம் பெற்று பணிக்கு செல்வதோடு முடிந்து விடுவதில்லை. நாடு மற்றும் சமுதாய வளர்ச்சிக்கு பாடுபட வேண்டும்.

2047ம் ஆண்டு 100வது சுதந்திர ஆண்டில் இந்தியா முழுமையான வளர்ச்சி அடைந்த நாடுகளின் பட்டியலில் இடம்பெற இளைஞர்கள் பாடுபட வேண்டும்.

இளைஞர்கள் வள்ளலார், விவேகானந்தர் வழிகாட்டுதல்படி நடக்க வேண்டும். இன்று பட்டம் பெற்றவர்களில் இளம் பெண்களை காண முடிந்தது. பெண் சக்தி அபரிமிதமானது. எதிர்கால இந்தியா பெண்களின் கைகளில் உள்ளது.

இவ்வாறு கவர்னர் ரவி பேசினார்.

INDIAN INSTITUTE OF MANAGEMENT
30 MAR 2025
TIRUCHIRAPPALLI - 24

Source : Dinamalar
Date : 30/03/2025
Page no : 16